[2005 ஏப்ரல் 6

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தான் அந்தப் பகுதிக்குச் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுப்பதற்கு விருப்பப்படுவாரேயானால், உள்ளாட்சித் துறையின்மூலமாக, மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்து பேசி, கண்டிப்பாகக் கட்டிக் கொடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு. முருகேசன்.

திரு. ஆ.கு. முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள் கேட்டதைத்தான் நானும் கேட்க நினைத்தேன். மாவட்ட...(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதே பதில்தான் உங்களுக்கும்.

வினா எண் 304, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

304—

பேருந்து வசதி

***16740**—**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம்–கடப்பேரி வழியாக, திருநீர்மலை சென்று கொண்டிருந்த கண்டிகை–திருநீர்மலை வழித்தடப் பேருந்து, நிறுத்துப்பட்டுவிட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இயக்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கண்டிகை–திருநீர்மலைக்கிடையே இதற்கு முன்பு நேரடியாக எந்தப் பேருந்தும் இயக்கப்பட்டு தற்போது நிறுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிகையிலிருந்து திருநீர்மலைக்குப் பேருந்து இயக்கப்பட்டு, மூன்று மாதக் காலம் அந்தப் பேருந்து இயங்கி, அங்கு சர்லை சரியில்லை என்கிற காரணத்தினால், அந்தப் பேருந்து நிறுத்தப்பட்டுவிட்டது. அதற்கான ஆதாரம் வேண்டுமானால், நான் அமைச்சரிடத்திலே

2005 ஏப்ரல் 6]

கொண்டுவந்து தருகிறேன். அது மீண்டும் இயக்கப்படுமா என்பதை மீண்டும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிகை–திருநீர்மலைக்கிடையே நேரடியாகப் பேருந்து வசதி இல்லை. ஆனால், பகுதிப் பகுதியாக அந்தப் பேருந்து வசதி செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு, நேரடியாகப் பேருந்து எப்போதும் இயக்கப்படவில்லை. ஆனால், எல்லாப் பகுதிகளிலும், அங்கே இருக்கின்ற அனைத்துக் கிராமங்களும், பகுதிப் பகுதியாக, அங்கே பேருந்து வசதி பெற்றிருக்கின்றன. இருந்தாலும், கடப்பேரி, தாம்பரத்திலேயிருந்து, கண்டிகைக்கு வழித்தடம் 55–சி எண்ணுள்ள இரண்டு பேருந்துகள்மூலம், 36 தனி நடைகள் இயக்கப்படுகின்றன. இவ்வழித்தடத்தில், பயணிகள் அடர்வு 57 சதவிகிதம்தான். அதேபோல், பல்லாவரத்திலிருந்து திருநீர்மலை வழியாக, பழந்தண்டலத்திற்கு வழித்தடம் 57 எண்ணுள்ள 4 பேருந்துகள் மூலம் 80 தனி நடைகள் இயக்கப்படுகின்றன. இந்த வழித்தடத்தில் அடர்வு 62 சதவீதம். அதேபோல, காலை அலுவலக நேரத்தில் திருநீர்மலைப் பகுதி மக்கள், குறிப்பாக பணிக்குச் செல்வோரின் நலன் கருதி பிராட்வே வரை ஒரு சிறப்புப் பயண நடை இயக்கப்படுகிறது. அந்தப் பகுதியிலே மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கின்ற அந்த வழித்தடத்தில் இந்த அளவிற்கு, போதுமான அளவிற்குப் பேருந்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இருந்தாலும்கூட இன்னும் இந்த வசதி போதாது, இன்னும் கூடுதலாக இயக்கப்படவேண்டும் என்று உறுப்பினர் கருதுவாரேயானால், அவருடைய கோரிக்கை குறித்து அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மீ.அ. வைதியலிங்கம்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தப் பகுதியிலே இப்போது தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கிறபோது, தாம்பரத்திலேயிருந்து திருநீர்மலை வழியாகச் செல்வது, கடப்பேரி வழியாகச் செல்வதுதான் தொழிலாளர்களுக்கு மிகவும் குறுகிய வழியாக இருக்கும். குறைந்தபட்சம் காலையிலும், மாலையிலும் இரண்டு முறையாவது இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியால் 25,000 தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெறுகின்ற விதமாக திருப்பூரில் புதிய பின்னலாடை தொழிற்பூங்கா தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்பூங்கா கோவை—ஈரோடு தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள காரணத்தால், அங்கே நகரப் பேருந்து வசதிகள் இல்லாத காரணத்தால், தொழிலாளர்கள் அந்தத் தொழிற்பேட்டைக்குச் செல்வதற்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்வி போடுங்கள்.

வினா எண் 305, திரு. மு. கார்த்தி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

305—

முன்பதிவகம்

***51600—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் சந்திப்பில் அரசு விரைவுப் பேருந்துகள் முன்பதிவகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முன்பதிவகம் திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சேலம் சந்திப்பில் முன்பதிவு மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. (ஆ) கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மே.ப. காமராஜ்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS